தினமணி (21.09.2022)

# புகழூர் காகித ஆலையில் ரத்ததான முகாம்

கரூர், செப்.20: புகழூர் காகித ஆலையில் ரத்த தான முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கரூர் மாவட்டம், புகழூர் காகித ஆலையில் காகித ஆலை மற்றும் கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சார்பில் ரத்த தான முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

முகாமை ஆலையின் செயல் இயக்குநர் (இயக்கம்) எஸ்.வி.ஆர்.கிருஷ்ணன், பொது மேலாளர் (மனிதவளம்) வி.ஜி.சுரேஷ், முதுநிலை மேலாளர் (மனிதவளம்) கே.எஸ்.சிவக்குமார், உதவி மேலாளர் (சட்டம்) வி.சுரேஷ், அரசு மருத்துவக் கல்லூரியின் ரத்த வங்கி மருத்துவர்கள் சங்கீதா, அறிவழகன் ஆகியோர் தொடக்கி வைத்தனர்.

முகாமில் ஆலைப் பணியாளர்கள், குடும்பத்தினர், ஒப்பந்த பணியாளர்கள், தொழில் பழகுநர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட 223 பேர் ரத்த தானம் செய்தனர். தொடர்ந்து ரத்த தானம் செய்தவர்களுக்கு பழச்சாறு, ஹார்லிக்ஸ், குளுக்கோஸ் மற்றும் பழங்கள் வழங்கப்பட்டன.




ரத்ததானம் செய்தவருக்கு பழச்சாறு வழங்குகிறார் ஆலையின் செயல் இயக்குநர் (இயக்கம்) எஸ்.வி.ஆர்.கிருஷ்ணன். உடன் பொது மேலாளர் (மனிதவளம்) வி.ஜி.சுரேஷ், முதுநிலை மேலாளர் (மனிதவளம்) கே.எஸ்.சிவக்குமார், உதவி மேலாளர் (சட்டம்) வி.சுரேஷ் உள்ளிட்டோர்.

http://www.maalaimalar.com Regd. No. TRY/061/2021-2023. RNI.No.42628/85

மாலை மலர்

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்

MAALAI MALAR

திருச்சி 22-9-2022 (வியாழக்கிழமை) 8 பக்கம் ₹ 5 ★ | மலர் 45 இதழ் 281

TRICHY 22-9-2022 (THURSDAY) 8 PAGES ₹ 5 | VOL: 45 ISSUE: 281




தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சார்பில் நடைபெற்ற ரத்த தான முகாமில் கலந்து கொண்டவர்களுக்கு காகித நிறுவனத்தின் அதிகாரிகள் பழச்சாறுகள் அடங்கிய தொகுப்பை வழங்கிய போது எடுத்த படம்.

# தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சார்பில் ரத்த தான முகாம்

கரூர், செப்.22—

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் மற்றும் கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை இணைந்து ரத்த தான முகாமினை கரூர் காகித நிறுவனத்தின் மனிதவள அரங்கில் நடைபெற்றது. காகித நிறுவனத்தின் மனிதவள அரங்கில் நடைபெற்ற இம்முகாமின் துவக்க விழாவில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் செயல் இயக்குநர் கிருஷ்ணன் (இயக்கம்), பொது மேலாளர் சுரேஷ் (மனிதவளம்), முதுநிலை மேலாளர் சிவக்குமார் (மனிதவளம்), உதவி மேலாளர் சுரேஷ் (சட்டம்) மற்றும் கரூர் மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரி இரத்த வங்கி மருத்துவர்கள் சங்கீதா, அறிவழகன் ஆகியோர் மருத்துவ முகாமை தொடங்கி வைத்தனர்.

மேலும், இம்முகாமில் கலந்து கொண்டு இரத்த தானம் செய்தவர்களுக்கு பழச்சாறு, ஹார்லிக்ஸ், குளுக்கோஸ் மற்றும் பல வகையான பழங்கள் வழங்கப்பட்டன. இம்முகாமில் ஆலை பணியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர், ஒப்பந்த பணியாளர்கள், தொழில் பழகுநர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் ஆர்வத்துடன் கலந்து கொண்டு இரத்த தானம் செய்தனர்.

காலை 8 மணி முதல் மதியம் 1 மணி வரை நடைபெற்ற இம்முகாமில் மொத்தம் 223 நபர்கள் பங்கேற்று ரத்த தானம் செய்தனர். ரத்த தான முகாமில் பங்கேற்று ரத்த தானம் செய்தவர்களுக்கு கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் சார்பில் சான்றிதழ் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

**தினத்தந்தி (23.09.2022)**

# ரத்ததான முகாம்

வேலாயுதம்பாளையம், செப்.23-

புகழூர் காகித ஆலை, கரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை இணைந்து ரத்ததான முகாமை காகித ஆலை வளாகத்தில் நடத்தினர். முகாமை காகித ஆலை செயல் இயக்குனர் கிருஷ்ணன் தொடங்கி வைத்தார். காகித ஆலை தொழிலாளர்கள் மற்றும் அவரது குடும்பத்தினர், ஒப்பந்த தொழிலாளர்கள், பயிற்சி பணியாளர்கள் என மொத்தம் 223 பேர் கலந்து கொண்டு ரத்ததானம் செய்தனர். இதையடுத்து அவர்களுக்கு காகித ஆலை சார்பில் பழச்சாறு, ஹார்லிக்ஸ், குளுக்கோஸ், பழங்கள் வழங்கப்பட்டது. இம்முகாமில் மனிதவளம் பொது மேலாளர் சுரேஷ், முதுநிலை மேலாளர் சிவக்குமார், கரூர் மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை ரத்த வங்கி டாக்டர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.